**விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(செப்டம்பர் 26-ம் தேதி முதல் செப்டம்பர் 30-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (22.9.15- 24.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 11.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25- 27 |
| வானம் (ஆக்டா) | 4- 7 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 56- 61 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 37- 86 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 10- 14 |
| காற்றின் திசை | 180- 230 |

**30.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>26.9.15 | நாள் 2<br>27.9.15 | நாள் 3<br>28.9.15 | நாள் 4<br>29.9.15 | நாள் 5<br>30.9.15 |
| மழை (மி.மீ.) | 10 | 22 | 23 | 22 | 25 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 37 | 35 | 35 | 35 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24 | 23 | 23 | 23 | 23 |
| வானம் (ஆக்டா) | 5 | 7 | 7 | 7 | 7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 72- 65 | 80- 75 | 85- 76 | 86- 78 | 88- 79 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 13/ தெற்கு | 13/ தெற்கு | 13/ தெற்கு | 13/ தெற்கு | 13/ தெற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| சோளம் | விதையளவு | மானாவாரியில் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்வதற்கு 22.5 கிலோ/எக்டர் என்ற அளவில் (பரிந்துரைக்கப்படும் விதையளவின் 1.5 மடங்கு) விதைகளை பயன்படுத்தவும். |
| | விதை கடினப்படுத்துதல் | மானாவாரியில் முன்பருவ விதைப்பு செய்யப்படும் சோளத்தின் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். விதைகளை 2 சத பொட்டாசியம் |

| | | |
|---|---|---|
| | | டைஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும். |
| | பூச்சிக்கொல்லி விதை நேர்த்தி | மானாவாரியில் சோளத்தில் பூச்சி தாக்குதலை குறைக்க விதைகளை 15 கிராம் குளோர்பைரிபாஸ் + 150 மி.லி. பசையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கவும். |
| பருத்தி, சோளம், மக்காச்சோளம், பயறுவகைகள் | பயிர் இடைவெளி | மானாவாரியில் நல்ல மகசூல் கிடைக்க பெறுவதற்கு பயிர்களை சரியான இடைவெளியில் விதைத்து போதிய பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். பயிர் இரகங்களுள் பருத்தி மற்றும் சோளம் ஆகிய பயிர்களுக்கு 45 x 15 செ.மீ., மக்காச்சோளத்திற்கு 45 x 20 செ.மீ., பயறுவகைகளுக்கு 30 x 10 செ.மீ., வீரிய ஒட்டு இரகங்களுக்கு இடைவெளியாக பருத்திக்கு 90 x 60 செ.மீ., சோளத்திற்கு 45 x 15 செ.மீ., மக்காச்சோளத்திற்கு 60 x 25 செ.மீ. என்ற அளவை பின்பற்றவும். |

குறுஞ்செய்தி-: மழை: செப்டம்பர் 26-30: 10, 22, 23, 22& 25 மி.மீ. பயிர்இடைவெளி (செ.மீ.)- இரகம்: சோளம்:45x15; வீரியஒட்டு இரகம்: பருத்தி: 90x60; சோளம்: 45x15; மக்காச்சோளம்: 60x25.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி